1982 பிப்ரவரி 11]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொல்லியதைப் போல இது 6-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டு, 50 லட்சம் ரூபாய் செலவழிக்கப் படுவதாக கருத்து சொல்லி இருக்கிறார்கள். 1982–83-லே 15 இலட்சம், 1983–84-லே 15 இலட்சம், 1984–85-லே 20 இலட்சம் செலவழிக்கப்படும் என்ற கருத்தைச் சொல்லி இருக் கிறார்கள். அதைப் படிப்படியாகத்தான் செலவழிக்க முடியும். உடனடியாக வேலை துவங்கப்படுகின்ற வாய்ப்பு இருக்கிறது.

உதகையிலிருந்து விரைவுப் பேருந்துகள் விடும் திட்டம்.

***வினா எண். 156—திரு. கே. உச்சி** : மாண்மிகு போக்கு வரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) உதகையிலிருந்து சென்னை, மதுரை, திருச்சி, சேலம் போன்ற ஊர்களுக்கு விரைவு வண்டி விடும் உத்தேசம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) ஆம்.

(ஆ) திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் இத் தடங்களில் பேருந்துகளை இயக்க இருக்கிறது.

திரு. கே. உச்சி : தலைவர் அவர்களே, ஏற்கனவே அந்தப் பகுதிகளில் பேருந்துகள் ஓடிக்கொண்டிருந்தன. இடை யிலே அவற்றை நிறுத்தி விட்டார்கள். அதை உடனடியாக விடுவதற்கு அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, இந்த விரைவுப் பேருந்துகளைப் பொறுத்தவரையில், இப் போது நம்மிடத்திலே இருக்கின்ற சாதாரண பேருந்துகள் மலைப் பகுதியில் போக முடியாது. அப்படி மலைப் பகுதிகளிலே ஓடுவதற்குத் தேவையான அமைப்புகளை உடைய பேருந்துகளை வாங்க அரசு நடவடிக்கை எடுத்து, அவைகளை வாங்கி, கூண்டு கட்டுவதற்காக விட்டிருக்கிறது. அந்த வேலை முடிந்த பிறகு மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய உணர்வுகள் திருப்தி யாகும் வகையில் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கே. உச்சி : தலைவர் அவர்களே, விரைவுப் பேருந்துகளை அரசு விடுவதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்தில் நீலகிரி போன்ற பகுதிகளில் எல்லா இடங்களிலும் விரைவுப் பேருந்துகள் இருந்தாலும், டெர்ரஸ் எஸ்டேட் என்று சொல்லப்படுகின்ற தோட்டத் தொழிலாளர்கள் வாழ்கின்ற பகுதிகளுக்கு விரைவுப் பேருந்து விடுவதற்கு அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, தோட்டத் தொழிலாளர்கள் வேலை செய்யும் பகுதிகளுக்கு விரைவுப் பேருந்துகள் விடுவதால் அது அவர்களுக்கு எந்த வகையிலும் பயன்படாது. எனவே அங்கே நகரப் பேருந்து தேவை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருதுவார்களானால், அதிகாரிகளை அனுப்பி தேவையான நடவடிக்கை எடுக்க நாம் இரண்டு பேரும் சேர்ந்து ஆவன செய்வோம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

பல்லவன் போக்குவரத்துக் கழக புறநகர் பிரிவில் உபயோகிக்கப்பட்ட போலிப் பயணச் சீட்டுகள்.

***வினா எண். 157**—திரு செ. செம்மலை, திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லவன் போக்குவரத்துக் கழக புறநகர்ப் பிரிவில் போலிப் பயணச் சீட்டுகள் தயாரித்து உபயோகித்த நடத்துனர்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

(ஆ) அதனால் போக்குவரத்துக் கழகத்திற்கு ஏற்பட்ட நஷ்டம் எவ்வளவு ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) போலிப் பயணச்சீட்டு தயாரித்த நடத்துனர்கள் தற்காலிகமாக வேலையிலிருந்து நிறுத்தப்பட்டுள்ளனர்.

(ஆ) இதுபற்றி புலனாய்வு நடைபெறுகிறது. புலனாய்வுக்குப் பின்னர்தான் நட்டம் பற்றிக் கணக்கிட முடியும்.